உ

கொக்குவில்

# ஸ்ரீ சாயி துர்க்காதேவி



# திருவூஞ்சல் பா

உ

சிவமயம்

# கொக்குவில்

# ஸ்ரீ சாயி துர்க்கா தேவி



# திருவூஞ்சல் பா

3-ம் பதிப்பு — 1995

உ

# ஸ்ரீ சாயி துர்க்கா தேவி

## திருவூஞ்சல் பா

### ( காப்பு )

பூந்தமிழும் பொலிந்திடுநற் சைவம் ஓங்கும்
பொன்னாரும் யாழ்ப்பாணப் பதியில் மின்னும்
காந்தமெழு கலவிகலை செழித்து வாழும்
கவின் கொக்கூர் புகழ்க்கோண வளையில் மேவும்
கூந்தலெழில் அருளன்னை யான தெய்வக்
குணவதியாம் ஸ்ரீ சாயி துர்க்கா தேவி
சாந்தமதாய்த் திரூஞ்சல் பாடி ஆடச்
சம்பூத னத்தலத்துத் தும்பி காப்பாம்,

### ( நூல் )

சுருதிமறை நான்கும் நாற் காலக ளாகச்
சிவாகமமே நடுவயிர விட்ட மாகக்
கருதரிய கலைஞானம் கயிற தாக
கவினெழிற்சீர்ச் சக்கரமே பீடமாக
அருமொழியாம இனியதமிழ் ஊஞ்ச லேறி
ஆனந்த அருள்கொழிக்கும் பதியாம கொக்கூர்
திருமலியும் தலக்கோணா வளையில் மேவும்
ஸ்ரீ சாயி துர்க்காமபா ஆடீர் ஊஞ்சல.

நெஞ்சினிலே பக்தியெனும் கால்நி றுத்தி
நீணிலத்தில் பஞ்சபுலன் விட்டம் பூட்டி
வஞ்சமிலா நாற்கரண வடங்கள் மாட்டி
வளமார்ந்த திருவருளாம் பீடம் தேக்கி
மிஞ்சும் எழில் ஊஞ்சலிலே ஜீவன் ஆட
மிளிர்ந்திடுநல் லருள்பொழியும் தாயும் நீயே!
செஞ்சதுரத் தலக்கோணா வளையில் மேவும்
ஸ்ரீ சாயி துர்க்காம்பா ஆடீர் ஊஞ்சல்.

மணிமுடியும் ஆடப்பூங் குழலும் ஆட
மதிவதன மலரிதழில் முறுவல் ஆட
அணிபிறையும் ரவியாட ஆரம் ஆட
அழகுதவழ் மாங்கல்யம் மார்பில் ஆட
பணியணியும் ஆடதிரி சூலம் ஆட
படைக்கலமாம் சங்கொடுசக் கரமும் ஆட
பிணி தீர்க்கும் தலக்கோணா வளையில் மேவும்
ஸ்ரீசாயி துர்க்காம்பா ஆடீர் ஊஞ்சல்.

மரகதத்தின் திருவண்ண மேனி ஆட
மாலாட நூலாட மறைகள் ஆட
உரகபட வடமாட உடுக்கை ஆட
உலகத்தின் நாயகனாம் சிவனும் ஆட
கரகமென வேப்பமர இலைக ளாடக்
களிகொள்ளும் பக்தருளம் கனிந்தே ஆடப்
புரமெனும்சீர்த் தலக்கோணா வளையில் மேவும்
ஸ்ரீ சாயி துர்க்காம்பா ஆடீர் ஊஞ்சல்

நாரதரும் தும்புருவும் கீதம் பாட
நாரியராம் அரம்பையரும் பரதம் ஆட
சீர துவாய்க் கலைமகளும் வீணை மீட்டச்
ஸ்ரீ தரனும் குழலிசைத்துக் கானம் பாட
சாரமிகு முழவானிசை நந்தி கொட்ட
சக்தியவள் பக்தர்விழி நீரும் சொட்ட
ஊரதிலே தலக்கோணா வளையில் மேவும்
ஸ்ரீ சாயி துர்க்காம்பா ஆடீர் ஊஞ்சல்.

பண்டமேகி பாதூரன் கொடுமை கண்டு
பயந்தோடித் தேவரெல்லாம் அபயம் கோர
மண்டலத்தில் சிங்கவா சனத்தில் ஏறிப்
படையாகத் திரிசூலம் வாளும் ஏந்தி
அண்டசரா சரம்நடுங்கப் போரும் செய்தே
அசுரனவன் அக்ருமத்தனை அழித்த தேவி!
தண்டவழும் தலக்கோணா வளையில் மேவும்
ஸ்ரீ சாயி துர்க்காம்பா ஆடீர் ஊஞ்சல்.

திங்கள்எழில் வதனமதில் கருணை பூக்க
திகழ்ச் செவ்வாய் தனில் அருளின் நகையும்பூக்க
சங்கரனார் சம்புதன்னை அணைக்கும் தேவி!
சகலகலைச் செல்வியாளன் அயனார் போற்றும்
பங்கஜச்செஞ் சேவடியில் வெள்ளி ஆர்க்கும்
பதத்தாளே சிங்கமதில் ஆசனித்தே
பொங்குனா யிநூக்கோணா வளையில் மேவும்
ஸ்ரீ சாயி துர்க்காம்பா ஆடீர் ஊஞ்சல்.

சந்திரனும் சூரியன்வெண் குடைக ளேந்தச்
சாமரங்கள் வாயுவெடுத் தேந்தி வீச
இந்திரனும் ஆலவட்டம் தாங்கி நிற்ப
இரம்பையரும் கலைப்பரதம் ஆடிப்பாட
மந்திரங்கள் வேதியரும் ஓதிப் போற்ற
மாதாநின் அருள் அடியர் உருகி ஏத்த
செந்தமிழின் தலைக்கோணா வளையில் மேவும்
ஸ்ரீ சாயி துர்க்காம்பா ஆடீர் ஊஞ்சல்.

திரிசூலி அபிராமி ஆடீர் ஊஞ்சல்
திகழ்வீ மாகாளி ஆடீர் ஊஞ்சல்
அரிமாவின் வாஹினியே ஆடீர்ஊஞ்சல்
அபயமருள் அம்பிகையே ஆடீர் ஊஞ்சல்
வரமான் அருள்மாரீ ஆடீர் ஊஞ்சல்
வாராகி வைஷ்ணவீ ஆடீர் ஊஞ்சல்
புரமான தலக்கோணா வளையில் மேவும்
ஸ்ரீ சாயி துர்க்காம்பா ஆடீர் ஊஞ்சல்.

## ( வாழி )

வேதியரும் வானவரும் கோவும் வாழி
விளங்குமழை ஆனிரைகள் செழித்தே வாழி
மேதினியில் செந்தமிழும் சைவம் வாழி
மேலான கற்பு நெறி ஞானம்வாழி
ஓதிடுமோ மறைவாழி கலைகள் வாழி
ஒப்பில்லாக் கொக்குலாம் பதியும் வாழி
ஜோதியென் தலக்கோணா வளையும் வாழி
ஸ்ரீ சாயி துர்க்காவும் வாழி ! வாழி !

கற்பகவளஞ் சுரக்கும் கருணை நாயகியே போற்றி!
நற்பத நலஞ் சுரந்து நாயேனை யாண்டாய் போற்றி !
பொற்புயர் கொக்கூர் மேவும் புவன நாரணியே போற்றி
அற்புத சாயி துர்க்கை யம்மையே போற்றி ! போற்றி !



கபிலா பதிப்பகம், [illegible]யாழ்.